# விடுமுறைகால விசேட கற்றல் செயற்பாடு ~2020
## மட்டக்களப்பு மத்தி வலயம்~ஏறாவூர்

T-03

# தமிழ்மொழியும் இலக்கியமும்

**தரம் :~ 11** **நேரம் :~ 45 நிமிடங்கள்**

## பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

01. மொழிக்கு முதலில் மட்டும் வரும் வினா எழுத்துக்கள்
(1) எ, யா (2) எ, யா, ஏ (3) எ, ஆ (4) ஆ, ஓ

02. பின்வருவனவற்றுள் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாக அமையும் சொல்
(1) அத்தை (2) அம்மா 3) தம்பி 4) அண்ணா

03. “வளர்ந்த பூஞ்செடிகளைக் கத்தரித்துத் துப்புரவு செய்தனர்.” இதில் இடம்பெற்ற பெயரடை
(1) வளர்ந்த (2) பூஞ்செடி (3) கத்தரித்து (4) துப்புரவு

04. “பானையில் இருந்தால்தானே அகப்பையில் வரும்” இதில் “இல்” உருபின் பொருள்
(1) காரணம் (2) இடம் (3) நீங்கல் 4) உடைமை

05. பின்வருவனவற்றுள் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாக அமைவது,
(1) பருப்பு (2) கதவு (3) உராய்வு (4) மாது

06. வீதிப்போக்குவரத்து விதிகள் நடைமுறையிலுள்ளன.
விபத்துக்கள் குறைந்த பாடில்லை.
இவ்வாக்கியங்களை இதே ஒழுங்கில் இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
(1) இருப்பினும் (2) ஆகவே (3) எனவே (4) அதனால்

07. பின்வருவனவற்றுள் கூட்டு வினையாக அமைவது
(1) உருட்டுவித்தான் (2) விடாமுயற்சி (3) தட்டிக்கொடு (4) காண்பித்தான்

08. அகரவரிசையில் அமைந்த சொற்றொகுதி
(1) சங்கு, சாக்கு, சீற்றம், சினம் (2) தையல், தப்பு, தாவரம், தீமை
(3) போக்கு, பார்வை, போதல், போலி (4) ககனம், காவல், கீதை, கோவை

09. பின்வருவனவற்றுள் கெடுதல் விகாரம் இடம்பெற்ற தொகுதி
(1) கடலலை, தமிழிலக்கியம் (2) ஆணழகன், சொன்னயம்
(3) மழைமேகம், தொடுவானம் (4) பணவரவு, நீலவானம்

10. இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக அமையும் தொடர்
(1) வாழைப்பழம் (2) கருங்குவளை (3) வட்டப்பலகை (4) நறுமணம்

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

11. உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பாளர் ...................................... தாக்கல் செய்தார்.
   (1) வேட்புமனு (2) விண்ணப்பம் (3) விஞ்ஞாபனம் (4) அறிக்கை
12. வரவு செலவுத் திட்டத்தில் …….......... ஈடுசெய்வதற்காக அரசு வெளிநாட்டுக் கடனுதவிகளை நாடியது.
   (1) பற்றாக்குறையை (2) துண்டுவிழும் தொகையை
   (3) மேலதிக செலவை (4) கொடுப்பனவுகளை
13. வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் ...................................... வழங்கப்பட்டது.
   (1) சன்மானம் (2) கடன் (3) மானியம் (4) வேதனம்
14. புதிதாகச் செய்யப்பட்ட தேர், கப்பல் ஆகியவற்றை முதன்முதலில் செலுத்துதல் ........................ எனப்படும்.
   (1) வெள்ளோட்டம் (2) ஒத்திகை (3) அரங்கேற்றம் (4) கால்கோள் விழா
15. அரசாங்கம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ………………….. வழங்கியது.
   (1) இழப்பீடு (2) மதிப்பீடு (3) காப்பீடு (4) முதலீடு
16. அரசாங்கம் சமாதானத்தை நிலைநாட்ட தேசிய நல்லிணக்க ……..…….. ஒன்றை அமைத்துள்ளது.
   (1) ஆணையாளர் (2) பணிப்பாளர் (3) ஆணைக்குழு (4) நிர்வாகக்குழு
17. இலை குழைகளால் வேயப்பட்ட குடிசை ………………….. எனப்படும்
   (1) ஆச்சிரமம் (2) பன்னசாலை (3) ஆதுலர்சாலை (4) பாசறை
18. சுற்றுலாத்துறையின் வளர்ச்சியால் எமது நாட்டின் ………………… வீதம் அதிகரித்துள்ளது.
   (1) மூலதனம் (2) முதலீடு (3) மானியம் (4) அந்நியச் செலாவணி
19 மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வுகள் தோன்றி மனிதனை மனிதன் …………………………
   (1) அடக்கியாள்கின்றான் (2)அடக்கி ஆளலாம்
   (3) அடக்கி ஆள்கின்றார்கள் (4) அடக்கி ஆள்வார்

- வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

20. நூலகத்திலுள்ள ஒவ்வொரு …………………………………..
   (1) புத்தகங்களும் பயனுடையது. (2) புத்தகமும் பயனுடையது.
   (3) புத்தகமும் பயனுடையன. (4) புத்தகங்களும் பயனுடைய
21. பொலிசார் விரித்த வலையிலே திருடர் கூட்டம் …………………………………
   (1) அகப்பட்டனர் (2) அகப்பட்டுக்கொண்டனர்
   (3) அகப்பட்டார்கள் (4) அகப்பட்டது

• தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

“கால்கள் குதித்துநட மாடுதேயடா - கவிக்
கள்ளைக் குடித்தவெறி ஏறுதேயடா
நூல்கள் கனித்தமிழில் அள்ளிட வேண்டும் - அதை
நோக்கித் தமிழ்ப்பசியும் ஆறிட வேண்டும்”

22 இப்பாடலின் மையக்கருத்து யாது?

(1) தமிழ்ப்பற்று (2) பெருமை (3) வீரம் (4) பசியாறுதல்

23. **‘தமிழ்ப்பசி’** என்பது என்ன அணி?

(1) உவமை (2) உருவகம் (3) தற்குறிப்பேற்றம் (4) உயர்வு நவிற்சி

24. இங்கு **‘கவி’** என்பதன் பொருள்

(1) புலவன் (2) குரங்கு (3) கவிதை (4) இசை

• கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

25.

(அ) பிறரைப் பாடுவதற்கு அவர் மனம் இடங்கொடுப்பதில்லை.
(ஆ) கபிலருடைய இணையற்ற பெரும் புலமை தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தது.
(இ) பாரியினுடைய குணங்களையும் செயல்களையும் பாடுவதில் கபிலருக்கு ஒரு தனியான மகிழ்ச்சி இருந்தது.
(ஈ) அவருடைய வாக்கினால் ஒரு செய்யுளேனும் பெறவேண்டும் என்று அரசர்கள் தவங்கிடந்தார்கள்.
(உ) பாரியினுடைய கொடைச் சிறப்பைக் குறித்து அவர் பல செய்யுள்களைப் பாடினார்.

(1) ஆ, ஈ, உ, அ, இ (2) இ, அ, உ, ஆ, ஈ
(3) ஆ, உ, அ, ஈ, இ (4) இ, ஈ, அ, உ, ஆ